**கல்பிட்டி பிரதேச சபை - 2023**
-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்பிட்டி பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு (பொருத்தமான வகையில்) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான கல்பிட்டி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு (பொருத்தமானவாறு) இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மிளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுரைச்சோலை பொருளாதார நிலையத்தின் மலசலகூட முறைமையின் ரூபா 4,602,544 ஆன பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவுகள் ஊடாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பு பதிவுகள் ஊடாக திருத்துவதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மிளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்4ற்றுக்களின் பிரகாரம் வைப்பக்கள் மீதி ரூபா 38,479,730 ஆக இருந்ததுடன் பட்டியல் பிரகாரம் ரூபா 38,357,418 ஆக இருந்தமையால் ரூபா 122,312 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசங்களிற்கான காரணங்களை விசாரணை செய்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாக சோசலீச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(ஆ) | 19 சந்தர்ப்பங்களில் ரூபா 229,658 தொகையான முற்பணஙள் பணி பூர்த்தியான உடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளிலிருந்து அகற்றவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 571(2) | 02 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 1,098,733 தொகையான 15 வைப்புக்கள் தொடர்பில் நி.பி இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத்திற்குள் வைப்புக்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் பிரிவுகள்129(2) (ஆ) மற்றும் (ஊ) | குத்தகை வாடகைகள், கடை வாடகைகள், நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரி என்பன முறையான வழியில் சாட்டுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக இருக்கின்ற குத்தகை வாடகைகள் மற்றும் கடை வாடகைகளை செலுத்துவதற்கு கடிதங்கள் அனுப்பப் பட்டிருந்ததுடன் ஆகஸ்ட முதல் திசெம்பர் வரையான நீதி மன்ற தண்டப் பணங்களை பெறுவதற்கு ஆளுநருக்கு வேண்டுகை செய்யப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்த்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | | | |
| (i) விதி இல.33 | மதிப்பீட்டு வரி மற்றும் ஆதன பாதுகாப்பிற்காக உத்தரவாதம் என்பவற்றின் தவறியவர் பட்டியல் ஒவ்வொரு காலாண்டும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக இருக்கின்றவையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழஙகப்பட்டிருந்தது. | சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) விதி இல. 65 | குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குள் வரிசெலுத்த தவறியோர் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடு தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழஙகப்பட்டிருந்தது. | அதிகாரச் சட்த்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 40,011,831 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 47,993,968 ஆகும்.

### 2.2. வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| வீதவரியும் வரியும் | 5,265 | 4,545 | 2,483 | 14,593 | 5,383 | 5,161 | 3,310 | 16,668 |
| வாடகை | 18,217 | 16,480 | 12,930 | 11,012 | 15,819 | 15,532 | 15,536 | 9,034 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3,711 | 2,638 | 2,638 | - | 3,745 | 2,588 | 2,588 | 35 |
| ஏனைய வருமானம் | 8,225 | 4,336 | 4,336 | - | 6,010 | 5,648 | 5,648 | - |
| மொத்தம் | 35,418 | 27,999 | 22,387 | 25,605 | 30,957 | 28,929 | 27,082 | 25,737 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,090,328 ஆன நிலுவையாக இருக்கின்ற மதிப்பீட்டு வரி, ரூபா 1,067,835 ஆன ஏக்கர் வரி, ரூபா 338,057 ஆன நீர் வரி மற்றும் ரூபா 3,780,691 ஆன வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவயையாக இருக்கின்ற தெகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவயையாக இருக்கின்ற வருமானத்தை சாட்டுதல் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திசெம்பர் 31 இல் ரூபா 51,913,770 ஆன முத்திரை வரி மற்றும் ரூபா 4,999,850 ஆன நீதி மன்ற தண்டப்பணம் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய | நீதி மன்ற தண்டப்பணத்தை அறவிடுவதற்கு ஆளுநருக்கு வேண்டுகை கடிதம் அனுப்பப் பட்டிருந்ததுடன் முத்திரை வரி பட்டியல்கள் மாகாண சபை | நிலுவயையாக இருக்கின்ற வருமானத்தை உடனடியாக சேகரிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| மாகாண சபை உத்தியோகத்தர்களிடமிருந்து சாட்டுதல் செய்ய வேண்டியிருந்தது. | வருமான அலுவலகத்திற்கு தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 18 கைத்தொழில் உரிமையாளர்கள் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெறப் பட்டிருக்காததுடன் அந்த காரணத்திற்காக ரூபா 57,500 ஆன வருமானத்தை இழந்திருந்தது. | கைத்தொழில் உரிமையாளருக்கு கடிதங்கள் அனுப்பபட்டிருந்தது. | நிலுவையாக இருக்கின்ற வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | எந்திர பொறியியலாளரின் பரிந்துரையை பெறாமல் ரூபா 1,650,000 கிரயத்தில் சபைக்கு சொந்தமான கப் வாகனத்தின் திருத்தங்களிற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | பாதீடு வருடாந்த பொதுக் கூட்டத்தில் அனுமதிக்கப் பட்டிருந்தது. ஒப்பந்த கப் திருத்தப்பட்டிருந்தது. | எந்திர பொறியியலாளரின் பரிந்துரை பெறப்பட வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தான அபிவிருத்தி பகுதிகள் இனங்கண்ட பின்னர் சபை உத்தியோகத்தர்கள் புதிய வரி மதிப்பாயிவொன்றை மேற்கொண்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீட்டு வரி மதிப்பாய்வு மேற்கொர்கையில் வருமானம் சாட்டுதல் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்குகளின் மீதி ரூபா 13,270,926 ஆக இருந்ததுடன் 03 இற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையில் ரூபா 10,180,886 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய தொகைகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்குகளின் மீதி ரூபா 26,827,596 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளை விட அதிகமானவை ரூபா 6,768,355 ஆன மீதி இருற்தது. | எதிர்காலத்தில் செலுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய தொகைகளை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 செயற்பாட்டுத் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 59 கடைகளின் உடன்படிக்கை காலப் பகுதி காலாவதியாகி இருந்ததுடன் நாளதுவரையாக்குவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2023 ஆம் ஆண்டிற்காக வாகனத் தரிப்பிடங்களிலிருந்து வருமானங்களை சேகரிப்பதற்கு நபர் ஒருவர் உடன்படிக்கை இல்லாமல் ரூபா 777,689 ஆக கேள்வி தொகை வழங்கியிருந்தார். | கேள்விப் பணம் ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) சபைக்கு சொந்தமான 464 கொடிக் கம்பங்களில் 244 காணாமல் போயிருந்தது. | பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) சபையால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கடைத் தொகுதி, வாராந்த சந்தை, பொது விளையாட்டு மைதானம், சிறுவர் ங்கா, ஆரம்ப பாடசாலகள், நூலகங்கள், மைதானங்கள், பஸ் தரிப்பிடம், பொது மலசல கூடம் மற்றும் சமுதாய மண்டபம் என்பன உள்ளடங்கிய 69 சொத்துக்கள் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உடனடியாக அறவிடப்படும். | உரிய ஆதனத்தை உடனடியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| திரு. காதர் வன்னிமுன்டலாம இன் வீட்டு வீதிக்கு கொங்றீட் இடுவதற்காக 2023 மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 995,2023 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதியிலிருந்து மேற்கெண்ட கொங்றீட் வலுப்படுத்தல் வேலையை பரீட்சிப்பதறகாக கனவளவு பரீசிப்பதற்கு 07 நாட்களிலிருந்து கனவளவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் சரியான அறிக்கை பெறப்பட்டிருக்காததுடன் கனவளவு பரீட்சிப்பு பெறுவதற்கு ஒப்பந்தகாரர்கள் முயற்சித்திருக்கவில்லை. | பதில் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சரியான நேரத்தில் சரியான அறிக்கை பெற்ற பின்னர் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 இரண்டாம் நிலை பதவிகள் மற்றும் 12 ஆரம்ப நிலை பதவிகளில் வெற்றிடங்கள் நிலவின. | எதிர்காலத்தில் இருக்கின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சபைக்கு தேவையான ஆளணியை சரியாக இனங்கண்டு அனுமதிக்கப்பட வேண்டும். |

### 3.6 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையால் பயன்படுத்தப்பட்ட 08 வாகனங்களின் உரிமையாண்மைய சபை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திற்கு கையேற்றல் தொடர்பான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வாகனங்களின் உரிமையாண்மையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தின் செயற்பாட்டு நடைமுறையின் முன்னேற்றம் அதன் செயலற்றலை தரமுயர்த்துவதற்காக நடைமுறைக்கு ஆதரவாக உளளது ஆனால்சபையின் உள்ளக கணக்காய்வு வருமானம், ஊழியர் கடன்கள் மற்றும் விடுமுறை பரிசோதித்தல் கட்டிட விண்ணப்பங்கள் என்பவற்றிலேயே கவனத்தை செலுத்தியிருந்தது. | உள்ளக கணககாய்வு முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | முக்கியமான துறைகளை மேவி உள்ளக கணக்காய்வு திட்டங்கள் திட்டமிடப்பட:டு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குள் பாதீட்டு மதிப்பீடுகளில் 09 செலவின விடயங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 5,182,100 ஆன மொத்த ஏற்பாடுகளும் உரிய பாதிடப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக பன்படுத்தப்படிருக்கவில்லை. | குறித்த காலப்பகுதிக்குள் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை அமுலாக்குவது கடினமாக இருந்தது.. | செயற்பாட்டு நடவடிக்கைகள் பாதிடப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு இயலக்கூடியவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அதேநேரம், மீளாய்வாண்டு தொடர்பில் 12 விடயங்களிற்காக ரூபா 8,135,800 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கு குறைவானதே செலவு ஏற்பட்டிருந்தது. | குறித்த காலப்பகுதிக்குள் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை அமுலாக்குவது கடினமாக இருந்தது. | செயற்பாட்டு நடவடிக்கைகள் பாதிடப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு இயலக்கூடியவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2030 நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் பிரகாரம் அடைய வேண்டிய நோக்குகள் மற்றும் இலக்குகளை அடையும் நோக்கில் சபையால் 69 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளிற்காக இனங்காணப் பட்டிருந்ததுடன் 10 இலக்குகள் மாத்திரமே நிறை வேற்றப்பட்டிருந்தது. | இலக்கிடப்பட்ட நிகழ்ச்சிகள் உத்தியோகத்தர் பற்றாக்குறையினால் அமுலாக்க முடியாதிருந்தது. | நோக்குகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |